பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 15 சனிக்கிழமை 31.10.2020 கதிர் 226

# யாழில் 14 பேருக்குக் கொரோனா; 956 பேர் சுயதனிமைப்படுத்தலில்!

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மொத்தமாக 14 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இம்மாவட்டத்தில் தற்போதைய நிலையில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்போதுள்ளயாழ். மாவட்ட நிலைமைகள் தொடர்பில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது:-

2

# அமெரிக்காவின் பிடியிலிருந்து கோட்டா அரசு தப்பவே முடியாது



## மைக் பொம்பியோவின் கருத்து எடுத்துக்காட்டு என்கிறார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்தவரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதைத்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்துரைத்துவிட்டுச்

2

# இலங்கைக்கு வந்த சீனக்குழுவில் புதிய தூதுவர் மட்டும் தனிமையில்

## ஏனையோருக்கு நடமாட அனுமதி



கொழும்பு, ஒக் 31

வெளிநாட்டு இராஜதந்திரிகளின் விஜயங்களின்போது தனிமைப்படுத்தல் சட்டம் அவர்கள் மீது பாய்வதில்லை என்கின்ற விமர்சனங்கள் உள்ள நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

2

# 20ஆக உயர்ந்தது கொரோனா சாவு!



## 8 நாள்களில் மட்டும் 7 பேர் பலியெடுப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 31**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் சாவடைந்துள்ளார்.**

**கொழும்பு - 12, புதுக்கடையைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.**

**இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் பலியானவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.**

2

# ஊடக அமைச்சில் நால்வருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.31

ஊடக அமைச்சின் அதிகாரிகள் நால்வருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரும் இதில் அடங்கியுள்ளார்.

இதேவேளை, பொரளை பொலிஸ் நிலையத்தின் 6 உத்தியோகத்தர்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினர்.

# யாழ். மாநகர எல்லைக்குள் இன்று 11 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளருடன் தொடர்புகளைக் கொண்டிருந்த 11 பேரிடம் இருந்து இன்று காலை மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பெறுபேறு இன்று இரவு கிடைக்கும் என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, யாழ். நகரில் உள்ள மீன் சந்தைகளில் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பேலியகொட மீன் சந்தையைத் தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தையில்

2

# மேல் மாகாணத்திலிருந்து வெளியேறியோரை 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்த நடவடிக்கை

## அவர்களைத் தேடிப் பொலிஸார் வலைவீச்சு

கொழும்பு, ஒக் 31

ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்துவதற்கு முன்னர் மேல் மாகாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு புறப்பட்டவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இத்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறிப்பாக நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மேல் மாகாணத்தின் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று மற்றும் நேற்று முன்தினம் ஆகிய இரு

2

# கொழும்பு கடலோர பொலிஸ் நிலையம் மூடல்; 10 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா உறுதி

## பொறுப்பதிகாரி உட்பட 80 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஒக்.31

கொழும்புகடலோரப்பொலிஸ்நிலையம் கொரோனா அச்சம் காரணமாக இன்று காலை முதல் மூடப்பட்டுள்ளது.

2

# இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41ஆயிரத்து 500 மாணவர்கள் சேர்ப்பு

இலங்கையில் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 41 ஆயிரத்து 500 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளனர்.

இந்தத் தகவலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை புதிதாக 10 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மருத்துவ பீடங்களுக்கு 371 மாணவர்களும், பொறியியல் பீடங்களுக்கு 405 மாணவர்களும் இம்முறை இணைத்துக்

2

# தூக்கில் தொங்கிய நிலையில் விகாராதிபதியின் சடலம் மீட்பு!

திருமலை, ஒக்.31

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லங்காதுறையில் உள்ள விகாரையின் விகாராதிபதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

லங்காதுறையில் உள்ள பக்வத விகாரையின் விகாராதிபதியே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

2

# மஹிந்தவை பொம்பியோ புறக்கணித்தமைக்கு சமாளிப்பு காரணம் கூறும் பிரதமர் அலுவலகம்!

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் குறுகியகால விஜயத்தின்போது இலங்கை அரசின் தலைமைகளில் ஒருவரை மாத்திரம் சந்திப்பது போதுமானதாகக் கருதப்பட்டது. அதனாலேயே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷமைக் பொம்பியோவைச் சந்திக்கவில்லை என்பதுடன் முன்னரேயே சந்திப்பதற்கும் திட்டமிடப்பட்டிருக்கவும் இல்லை.

- இவ்வாறு பிரதமர் அலுவலகத்தின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் அனுராதா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனுராதா ஹேரத் தனது ருவிட்டர் பக்கத்தில்

2

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் கூட்டத்தைப் புறக்கணித்த உறுப்பினர்கள்

## மாநகரசபையில் இரு அணிகளாகப் பிளவு

யாழ்ப்பாணம்,ஒக்.31

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைமையினால் அதன் மாநகர சபை உறுப்பினர்களுக்கு என விடுக்கப்பட்ட கூட்ட அழைப்பை பெரும்பான்மை உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சிக்குள்தற்போது நிலவும் உள்முரண்பாடு காரணமாக யாழ். மாநகர

2

## இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படவுள்ளார்கள்.

இந்நிலையில், 2020 ஒக்டோபர் 28ஆம் திகதி கம்பஹா விக்கிர மாராச்சி ஆயுள்வேத கற்கை நிறுவனத்தைப் பூரணமான பல்கலைக்கழகம் என அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 21 ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக மானிய ஆணையத்துடன் கலந்தாலோசித்து கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

## தூக்கில் தொங்கிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட விகாராதிபதியை சடலமாக மீட்டுள்ளனர்.

குறித்த விகாராதிபதியின் மரணம் தொடர்பான விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழ்த் தேசிய மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் கட்சி இரண்டுபடும் நிலையில் மணிவண்ணன் தரப்பு தனித்தே செயல்படுகின்றது. இந்த வகையில் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் முன்னணியின் 13 உறுப்பினர்களும் இரண்டுபட்டே செயல்படுகின்றனர் எனத் தெரிகின்றது.

கடந்த 29 ஆம் திகதி சபையில் இடம்பெற்ற விசேட அமர்வில் அமைக்கப்பட்ட ஓர் குழுவில் முன்னணியின் சார்பில் மணிவண்ணனின் பெயர் மற்றுமோர் முன்னணி உறுப்பினரால் பிரேரிக்கப்பட்டது. இதன்போது அதனை மறுத்து ஜெயசீலனின் பெயரை முன்னணி சார்பில் இரண்டாம் பெயராகவும் பிரேரிக்கப்பட்ட போது ஒரு கட்சிக்கு ஓர் உறுப்பினர் என்ற அடிப்படையில் இரண்டாவது பெயர் நிராகரிக்கப்பட்டது.

இந்த விடயம் கட்சியின் தலைமைக்குக் கொண்டு செல்லப்பட்டதனால் மறுநாள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்களிற்கான விசேட கூட்டம் ஒன்று கட்சித் தலைமையினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் முன்னணியின் சார்பில் மாநகரசபையில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களில் 9 பேருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டது. இதனை அறிந்த மேலும் சில உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கும் 13 உறுப்பினர்களிற்கும் அழைப்பு விடுத்தால் மட்டுமே கூட்டத்துக்குச் சமுகம் அளிப்போம் எனத் தெரிவித்து மறுநாள் கூட்டத்தைப் புறகணித்தனர்.

ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கஜேந்திரகுமார் விசுவாச அணி எனக் கருதப்படும் நால்வர் மட்டுமே பங்குகொண்டனர். எஞ்சிய 9 பேரில் 8 பேர் மணிவண்ணன் விசுவாச அணியாக கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிகிறது. மற்றொருவர் கஜேந்திரகுமார் விசுவாச அணியில் இருந்தபோதும் பிறிதொரு காரணத்திற்காக கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை எனவும் கூறப்பட்டது.

## மஹிந்தவை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சந்திக்காமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

உண்மையில் ஆரம்பத்திலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மைக் பொம்பியோவைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருக்கவில்லை.

பொம்பியோவின் மிகக் குறுகியகால விஜயத்தின்போது இலங்கை அரசின் தலைமைகளில் ஒருவரை மாத்திரம் சந்திப்பது போதுமானதாகக் கருதப்பட்டது - என்றுள்ளது.

## கொழும்பு கடலோர .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 10 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதனால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 80 பேர் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடலோரப் பொலிஸ் நிலையச் செயற்பாடுகள் தற்காலிகமாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

## யாழ். மாநகர ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டதாலும், நுகர்வோர் இது தொடர்பில் அச்சம் கொள்வதைத் தடுக்கும் நோக்கிலுமே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குருநகர், பாசையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட 6 அங்காடிகளில் இருந்தும் தலா 5 பேர் வீதம் சோதனை மேற்கொண்டபோதும் இவர்களின் பெறுபேறு இதுவரை வெளிவராத போதும் அவை இன்று வெளிவருவதிலும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

## மேல் மாகாணத்தி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினங்களில், மேல் மாகாணம் மற்றும் குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவிலிருந்து வேறு பிரதேசங்களுக்குச் சென்றவர்களை, அவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலேயே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பில் தற்போது நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிவிப்பு வெளியாகியதை அடுத்து திரள் திரளாக மேல் மாகாணத்திலிருந்து குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பலரும் சென்றுள்ளனர். இந்த நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து தொழிலுக்காக வந்து கொழும்பில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு சென்றிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையிலும் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து இவ்வாறு மேல் மாகாணத்திலிருந்து சென்றவர்கள் பற்றிய தகவல்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

மேலும் அவர்கள் மீண்டும் திரும்புகின்ற சந்தர்ப்பத்தில் தனிமைப்படுத்தல் சட்டம் அவர்கள் மீது பாயும் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## 20ஆக உயர்ந்தது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று மரணமான குறித்த பெண்ணுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த பெண், நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் சிக்கி கடந்த 8 நாள்களில் (ஒக்டோபர் 22 - ஒக்டோபர் 30 வரை) 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

## அமெரிக்காவின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுள்ளார். எனவே, ஐ.நா. தீர்மானத்தை முன்வைத்த அமெரிக்காவின் இந்தக் கோரிக்கையை கோட்டாபய அரசு நிராகரிக்க முடியாது. அதை நிறைவேற்றும் கடமையிலிருந்து இந்த அரசு விலகவும் முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் பேசினார். இதன்போது பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை ஒருபோதும் விலக முடியாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை இலங்கை உறுதி செய்யக் கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டு சர்வதேசநாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அந்த தீர்மானத்திலுள்ள அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான வகையில் இலங்கை அரசு செயற்பட வேண்டும்.

இதைத்தான் இலங்கை வந்து சென்றுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார்.

ஆனபடியால் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பொறுத்த வரைக்கும் அதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். - என்றார்.

## இலங்கைக்கு வந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இலங்கையில் உள்ள பிரதான பி.சி.ஆர். இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறைத் திருத்துவதற்காக விசேட சீனத்தூதுக் குழுவும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. அவர்களில் எவரும் தனிமைப்படுத்தப்படவில்லை.

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் புதிய தூதுவர் ட்சீ சென்ஹொங் (**Qi Zhenhong**) நேற்றிரவு கொழும்பை வந்தடைந்துள்ளார்.

ட்சீ சென்ஹொங் பி.சி.ஆர். பரிசோதனையினை நிறைவு செய்து சீன ஈஸ்டன் ஏயார்லைன்ஸுக்குச் சொந்தமான எம்.யு. 231விமானம் மூலம் கட்டுநாயக்க விமானநிலையத்தை அவர் வந்தடைந்தார் என்று கொழும்பிலுள்ள சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

புதிய தூதுவர், அடுத்து வரும் இரு வாரங்களுக்கு சுயதனிமைப்படுத்தலில் தன்னை ஈடுபடுத்தவுள்ளார் எனவும், விமான நிலையத்தில் வைத்து வைபவ ரீதியான வரவேற்பை இலங்கையின் தற்போதைய நிலைமை கருதி அவர் மறுத்து விட்டார் எனவும், சொற்ப அளவிலான சீனத் தூதரக இராஜதந்திர சேவையில் உள்ளவர்களே அவரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்றனர் எனவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

1965ஆம் ஆண்டு பிறந்த இவர், 1988ஆம் ஆண்டு முதல் சீன இராஜதந்திர சேவையில் செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் சீன சர்வதேச கற்கைகள் நிறுவனத்தின் தலைவரான இவர், பொருளாதார நிபுணர் என்பதோடு பீஜிங்கில் உள்ள இராஜதந்திர சேவைகளுக்கான பணியகத்தில் செயற்பாட்டு பிரதி பணிப்பாளராக செயற்பட்டுள்ளதோடு சீன பிரிட்டிஷ் கூட்டுக்குழுமத்தின் இரண்டாம் நிலை செயலாளராகவும் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் பழுதடைந்துள்ள பிரதான பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்தை சரிசெய்ய சீன நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு நேற்றிரவு இலங்கைக்கு வந்தனர். கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதுவரை செயலிழப்புக்கான காரணம் தெளிவாக இல்லை என்றும், 7 நாள்களும் 24 மணித்தியாலமும் பல மாதங்களாக இயங்கிய பிற இயந்திரங்களும் சரி பார்க்கப்பட்டு பராமரிக்கப்படும் என்றும் சீனத் தூதரகம் ருவிட்டரில் பதிவிட்டுள்ளது.

பி.சி.ஆர். இயந்திரத்தின் செயலிழப்பு காரணமாக, கிட்டத்தட்ட 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமாகிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் 14 பேருக்குக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாவட்டக் கொரோனாத் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கின்றது. இந்நிலையில் மேலும் 6 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 14 பேர் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலையில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 956 பேர் சுய தனிமைப்படுத்திக் உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த 26ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த நபர் ஒருவருக்குத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. அவர் சென்ற இடங்கள் தற்போது முடக்க நிலைக்கு உள்ளாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதேநேரம் அவருடன் தொடர்பு கொண்டவர்களும் இனங்காண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் அவர் சென்று வந்த 4 கடைகளுக்கு மேல் மூடப்பட்டுள்ளன. அதேபோல் அவர் சென்ற உணவகம், சிகை அலங்கார நிலையம் போன்றனவும் மூடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நடமாட்டங்களைக் குறைக்க வேண்டும். தாம் செல்லும் இடங்கள் தொடர்பான விவரங்களை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் அவர்களுடைய வீடுகளிலேயே இரண்டு வாரங்களுக்குத் தங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டு பிற்பாடு வெளியில் செல்லலாம்.

வெளியே போவது மிக ஆபத்தான விடயம். தற்போது வடக்கில் தொற்று அதிகரிப்பதற்கு வெளிமாவட்டத்திலிருந்து வருவோரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணமாக இருக்கலாம். அதேபோல் வெளிமாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்கு வருவோர் கட்டாயமாக அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சமூக இடைவெளி, முகக்கவசம் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் செயற்பட வேண்டும். தற்போது கடைகள், வர்த்தக நிலையங்களைப் பொறுத்தவரைக்கும் அவர்களுக்குச் சில அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கின்றோம்.

கூடுமான வரைக்கும் அங்காடி வியாபாரங்களைத் தவிர்ப்பது நல்லது. குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து வந்து அங்காடி வியாபாரம் செய்பவர்கள் தற்காலிகமாகத் தமது வியாபாரத்தை நிறுத்த வேண்டும். - என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
076 443 8622

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அமெ. பார்வையில் இலங்கையின் ஜனநாயகமும், இறையாண்மையும்

இலங்கைக்கான அமெரிக்க வெளியுறவுச் செயலாளரின் விஜயம் தொடர்ந்தும் பல அதிர்வலைகளை ஏற்படுத்திச் சென்றிருப்பது அவதானிக்கத்தக்கது.

சீனாவுடன் மோதுவதாக நினைத்துக் கொண்டு பல்வேறு பிற தரப்புக்களையும் முட்டி மோதி, நெட்டித் தள்ளிச் சென்றிருக்கின்றார் இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ.

அப்படிப் பாதிக்கப்பட்ட தரப்புகளில் ஒன்று ஈழத் தமிழர்கள்.

சீனாவை எதிர்த்து இலங்கைக்குக் கை கொடுக்கின்றோம் என்ற நினைப்பில் – எண்ணத்தில் – தமிழர்களைப் புரட்டித் தள்ளிப் போட்டிருக்கின்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்பின் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ.

சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதற்காக இலங்கை ஜனநாயகத்தின் பெருமை மிகுந்த நாடு என்றும், அதன் இறைமை தனித்துவமானது என்றும் பகிரங்கமாகக் கூறி, ஈழத் தமிழர்களின் தேசியப் பிரச்சினையில் அவர்கள் பக்கம் இருக்கும் நியாயங்களை அவர் மிதித்துச் சென்றிருக்கின்றார்.

இலங்கை தேசத்தின் இறைமை என்பது பொம்பியோ புகழாரம் சூட்டும் அர்த்தத்தில் மதிப்புக்குரியதல்ல. தமிழர் தேசத்தின் தனித்துவ இறைமையைக் கைப்பற்றிக் கபளீகரம் செய்திருக்கும் சிங்கள தேசம், இரண்டையும் சேர்த்துத் தனது பெரும்பான்மை என்ற பலத்தினால் திரட்சியாக வைத்துக் கொண்டு அதனை இலங்கைத் தீவின் இறையாண்மை என்கின்றது.

அந்த இறையாண்மையை மிக உயரியதாகத் தூக்கிப் பிடித்துப் போற்றிப் புகழ்ந்து உரையாற்றி, அறிவிப்பு விடுத்தமை மூலம் தமிழர் தேசத்தின் இறைமையை அபகரித்து, அடிமைப் படுத்தி, அட்டூழியம் புரியும் சிங்கள தேசத்தின் அத்துமீறலைத் தம்மையும் அறியாமல் அங்கீகரித்துப் பெரும் தவறிழைத்திருக்கின்றார் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர்.

இன்னொரு தேசமான – தேசியமான – தமிழர் தேசத்தின் இறைமையை வல்வந்தமாகக் கவர்ந்து, அந்தத் தேசத்தை அடிமைப்படுத்தியிருக்கும், ஓர் ஆக்கிரமிப்பு தேசத்துக்கு, தனது இறைமையை மேலுமொரு தேசம் சூறையாடுவதை ஆட்சேபித்து, பகிரங்கமாகக் கண்டிப்பதற்குத் தகுதி ஏதும் இல்லை என்பதுதான் உண்மை.

அதனால்தான் என்னவோ இலங்கையின் இறையாண்மை குறித்து, அமெரிக்கா சிரத்தை தெரிவித்து உரையாற்றிய போது – 'ஆடு நனைகின்றது என ஓநாய் கவலைப்பட்ட மாதிரி' அதீத கவலை வெளியிட்ட போது – இலங்கை அதிகம் பிரதிபலிப்புக் காட்டாமல் பம்மிக் கொண்டிருந்தது போலும்.

இலங்கையின் ஜனநாயகத்தையும் மெச்சிப் புகழ்ந்து பேசியிருக்கின்றார் மைக் பொம்பியோ. இந்த நாடு – இலங்கைத் தீவு – 90 ஆண்டு கால ஜனநாயகப் பாரம்பரியம் கொண்டது என்று கருத்து வெளியிட்டிருக்கின்றார் பொம்பியோ.

அது உண்மைதான். இலங்கையின் வாக்குரிமைச் சரித்தத்துக்கு 90 ஆண்டு கால வரலாறு உண்டு. ஆனால் அது உயர்வானதாக மெச்சத்தக்கதே அல்ல.

அந்த வாக்குரிமைக்குப் பின்னால் – ஜனநாயகத் தோற்றப்பாடுகளுக்குப் பின்னால் – சேறும் சகதியுமான பல கேவலங்கள், படுகேவலங்கள் நிறையவே உள்ளன.

இந்த மண்ணின் பொருளாதார மீட்சிக்காக ஓடாய்த் தேய்ந்து மாடாய் உழைத்தவர்கள், நாட்டின் பொருளாதாரத்துக்காக வேர்வையும், குருதியும் சிந்திப் பணியாற்றியவர்கள் சுமார் பத்து லட்சம் பேரை ஒரே நாளில் நாடற்றவர்களாக்கி நட்டாற்றில் – நடு வீதியில் – விட்ட பெருமைக்கும் சிறுமைக்கும் உரியது இலங்கை ஜனநாயகத்தின் விழுமியம்.

பெரும்பான்மையினரின் தீர்ப்பே முடிவு என்ற ஜனநாயகத்தின் முட்டாள்தனமான பண்பியல்பு, இலங்கைத் தீவில் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் அநீதியான, கொடுங்கோலான, முறையற்ற, மனிதநேயமற்ற, கொடூர முடிவுகளுக்கு எல்லாம் நியாயம் கற்பித்து எப்போதுமே அட்டூழியங்கள் அரங்கேறவே துணை நின்றது.

தனக்குப் பெருமைக்குரியது என்று இலங்கை கணிப்பிடும் அதன் ஜனநாயக மாண்பின் அவல – துரதிஷ்ட – நிலை இது தான்.

இன்றும் கூட இலங்கைத் தீவில் முட்டிமோதி, முரண்பட்டு நிற்கும் இனங்களுக்கு இடையில் – தரப்புகளுக்கு இடையில் – நீதி, நியாயமான தீர்வும், நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்பட முடியாமல் இருப்பதற்கு எண்ணிக்கையில் பெரும்பான்மையானோரின் கருத்தே முடிவு என்ற ஜனநாயக கேலிக் கூத்தே காரணமாக அமைந்திருக்கிறது என்பது திண்ணம்.

அத்தகைய மூன்றாம் தர ஜனநாயகத்தையும், தமிழர் தேசத்தை வல்வந்தமாக ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி, அந்தத் தேசத்தின் இறையாண்மையையும் சேர்த்து கபளீகரம் பண்ணியிருக்கும் இலங்கையின் இறையாண்மையையும் அமெரிக்க சார்பில் பகிரங்கமாக மெச்சிப் பேசியிருப்பதன் மூலம் தனது தேசமான அமெரிக்காவின் மதிப்பார்ந்த நிலைப் பாட்டைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கியிருக்கின்றார் மைக் பொம்பியோ.

# ஊரடங்கை மீறுவோர்க்கு சட்டநடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதி கடும் உத்தரவு



மிக அவசர தேவையைத் தவிர தனிமைப் படுத்தல் ஊரடங்கு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அதிகாரிகளுடன் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை செயற்படுத்து மாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருள்கள் விநியோகத்தின் போது கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவு அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிப்புள்ள பகுதிகளில் திருமண நிகழ்வு மற்றும் மத வழிபாடு உட்பட மக்கள் ஒன்று கூடுகின்றமையை தவிர்க்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# இலங்கை - சீன உறவு தொடர்ந்து முன்னெடுப்பு

## புதிய சீனத் தூதுவர் தெரிவிப்பு



இலங்கை – சீன உறவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தமது அபிலாஷை என இலங்கைக்கான புதிய சீனத் தூதுவர் ஜன் ஹொங் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்து தமக்குரிய பதவியை பொறுப்பேற்கும் உரையை நிகழ்த்தியபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சீன அரசாங்கமும் மக்களும் ஒப்படைத்த பொறுப்பை ஏற்றுக்கொண்ட தூதுவராக தாம் இலங்கை என்ற நேச நாட்டுக்கு வருகிறார் என அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவு மூலோபாயம், பங்கா ளித்துவமாகப் பரிணமித்துள்ளது.

பல்வேறு துறைகளில் நீடிக்கும் ஒத்துழைப்பின் மூலம் சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன. பிராந்திய மற்றும் சர்வதேச அலுவல்களில் சிறந்த கருத்தாடல்கள் ஏற்பட்டுள்ளன.

கொரோனா நெருக்கடிக்கு எதிரான போராட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வலுப்படுத்தப்பட்டுள்ளது என புதிய சீனத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விஷேட அதிரடிப் படையினர் உட்பட 60 பொலிஸ் அதிகாரிகளுக்கு தொற்று

பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட 60 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆயிரத்து 100 இற்கு அதிகமான குழுவினர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கேகாலையில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

கேகாலை, ஒக்.31

கேகாலை – புளத்கொஹுபிட்டி பகுதியில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, புளத்கொஹுபிட்டி மற்றும் லேவல ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தலுக்கு அனுப்பும் வரை இந்தத் தடை விதிக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இன்று காலை வரையான காலப்பகுதியில் மொத்தம் 10 ஆயிரத்து 424 கொரோனா வைரஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் அறிக்கையின் பிரகாரம் 6 ஆயிரத்து 123 நோயாளிகள் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 4 ஆயிரம் 282 நோயாளிகள் முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

இந்தக் கொரோனா வைரஸ் தொற்றால், இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேல்மாகாணத்தில் ஊரடங்கை மீறிய 39 பேர் கைது!

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட மேலும் 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா, நீர்கொழும்பு மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக் கவசம் அணியாதவர்கள் மற்றும் சமூக இடைவெளியை தவிர்த்து செயற்பட்ட நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கொழும்பில் மேலும் சில பகுதி தனிமைப்படுத்தல்

கொழும்பு – மிரிஹானை பகுதிக்கு உட்பட்ட சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

வெல்சிறிபுர, ராவுலபுர மற்றும் ப்ரகதிபுர ஆகிய பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கொவிட் -19 ஐ தடுப்பதற்காக தேசிய செயலணி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பப்பட்டுள்ளது.

# மோடிக்கு பாதுகாப்பு வழங்கிய 23 பொலிஸுக்குக் கொரோனா!

குஜராத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்புபணிக்குசென்ற23பொலிஸாருக்குகொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக 2 நாள் சுற்றுப்பயணமாக நேற்று (வெள்ளிக்கிழமை) தனது சொந்த மாநிலமான குஜராத் சென்றிருந்தார்.

பிரதமரின் வருகை காரணமாக பாதுகாப்பு பணியில் 5 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம்கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

அந்தப் பரிசோதனை முடிவுகளில் 23 பொலி



ஸாருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள், தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா சிகிச்சை மையத்தில் சேர்க்கப்பட்டனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியா அமெரிக்கா உட்பட 4 நாடுகள் கடற்படை பயிற்சி

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் மலபார் கடற்பயிற்சி, எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 2 கட்டங்களாக நடைபெறுகிறது.

இதில் முதற்கட்ட பயிற்சி எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை விசாகப்பட்டணத்தில் வங்காள விரிகுடா கடலில் நடைபெற இருக்கின்றது. இரண்டாம் கட்ட பயிற்சி நவம்பர் மாத மத்தியில் அரபிக்கடலில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் முதற்கட்ட



மலபார் பயிற்சியில், அமெரிக்காவின் யு.எஸ்.எஸ்.ஜான் மெக்கைன், ஆஸ்திரேலியாவின் எச்.எம்.ஏ.எஸ்.பல்லாரத், ஜப்பானின் ஒனாமி ஆகிய போர்க்கப்பல்களும் அதனுடன் இணைந்த ஹெலிக்கொப்டர் வரிசைகளும் பங்கேற்கின்றன.

இந்தியா சார்பில் ரான்விஜய், ஶ்ரீவாலிக், சுகன்யா, சக்தி, சிந்துராஜ் போன்ற கப்பல்களும் கலந்து கொள்கின்றன. மேலும் ஹாக் ஜெட், நீண்டதூர கடல் கண்காணிப்பு விமானமான பி.81, டோர்னியர் விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களும் பயன்படுத்தப்பட உள்ளன.

இந்த பயிற்சியில் பங்கேற்கும் இந்திய குழுவுக்கு கிழக்கு பிராந்திய கட்டளை அதிகாரி வாத்சாயன் தலைமை தாங்குவார் என கடற்படை தெரிவித்துள்ளது.

# பா.ஜ.க. தொண்டர்கள் மூன்று பேரை சுட்டுக் கொன்றனர் பயங்கரவாதிகள்!



ஜம்மு – காஷ்மீர் மாநிலம் குல்காம் மாவட்டத்தில் பா.ஜ.க. தொண்டர்கள் மூவர் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பொலிஸார் –

பா.ஜ.கவின் ஃபிதா ஹுசேன், உமர் ஹஜாம் மற்றும் உமர் ரஷீத் பேக் ஆகிய 3 பேரையும் குல்காம் மாவட்டம் ஒய்.கே.போரா பகுதியில் பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

இதன்போது படுகாயம் அடைந்த மூன்று பேரையும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள் மூன்று பேரும் ஏற்கெனவே இறந்துவிட்டனர் எனக் கூறினர் எனத் தெரிவித்துள்ளனர்.

லக்ஸர் – இ – தொய்பா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய டி.ஆர்.எப். பயங்கரவாத அமைப்பு இந்தத் தாக்தலுக்கு பொறுப்பேற்றுள்ளது. டி.ஆர்.எப். அமைப்பு இதுபோல் தாக்குதல் நடத்துவோம் என சமூக வலைத்தளத்தில் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜம்மு – காஷ்மீரில் கடந்த ஜூன் மாதத்தில் இருந்து பா.ஜ.க. தொண்டர்கள் மற்றும் தலைவர்களைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலில் பா.ஜ.கவைச் சோந்த 8 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வூகான் நகருக்கு பயணித்தது ஏயார் இந்தியன் விமானம்

கொரோனா நோய்தொற்று முதன்முதலில் கண்டறியப்பட்ட வூகான் நகருக்கு இந்தியா தனதுவிமானசேவையைநேற்று(வெள்ளிக்கிழமை) ஆரம்பித்தது..

சீனாவின் உள்ள இந்திய தூதரக தகவல்படி நேற்று முதல் டெல்லி - வூகான் விமான பாதையில் வந்தே மாதரம் மின் (விபிஎன்) விமானம் இயக்கப்படும்.

அங்கு சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டெல்லி - குவாங்சோ இடையேயான விமானப் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டமையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பை ஏயார் இந்தியா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 48 ஆயிரத்து 268 பேர் புதிய தொற்றாளர்கள்!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 81 லட்சத்தைக் கடந்துள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாத்திரம், புதிதாக 48 ஆயிரத்து 268 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது –

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 81லட்சத்து 37 ஆயிரத்து 119 ஆக உயர்வடைந்



துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 48 ஆயிரத்து 268 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 551 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

இதனூடாக கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒ லட்சத்து 21 ஆயிரத்து 641 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 74 லட்சத்து 32 ஆயிரத்து 829 ஆக உயர்ந்துள்ளது. நேற்று மட்டும் 59 ஆயிரத்து 454 பேர் குணமடைந்துள்ளனர். புதிய நோய்த்தொற்று எண்ணிக்கையை விட அதிக நபர்கள் குணமடைந்துள்ளனர்.– என குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக முடிந்தது!

இந்திய விமானப் படைக்கு வலுச்சேர்க்கும் வகையில், வானில் இருந்து தரையிலுள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்திய விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளவை வருமாறு –

தமிழகத்தின் தஞ்சையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இந்திய விமானப் படைத்தளத்துக்குச் சொந்தமான எஸ்.யூ – 30 எம்.கே.ஐ.விமானம், பஞ்சாபில் உள்ள படைத்தளத்தில் இருந்து இயக்கப்பட்டது.

அந்த விமானம் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணையைத் தாங்கிச் சென்றது. 3 மணி நேரத்துக்கும் மேலாக அந்த விமானம் பயணித்து தொலைதூரம் சென்ற பின், ஏவுகணை செலுத்தப்பட்டது.

இதையடுத்து வங்கக் கடலில் இருந்த இலக்கை பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது. – எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தஏவுகணைநிலத்திலோ,கடலிலோதொலைதூரத்தில் உள்ள இலக்கை துல்லியமாகத் தாக்கி அழிக்க வல்லது.

இந்தஏவுகணையைபகல்,இரவுஎனஇருவேளைகளிலும் இலக்கை நோக்கி செலுத்த முடியும். மோசமான வானிலையிலும் இலக்கைத் தாக்கி அழிக்கும். இந்திய விமானப் படையின் போர் திறனை அதிகரிக்கும் நோக்கில் 40 இற்கும் மேற்பட்ட சுகோய் போர் விமானங்களில் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகளை ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமெ.ஜனாதிபதித் தேர்தல் ஜோபிடன் வாக்களித்தார்!



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் மற்றும் அவரது மனைவி ஜில் ஆகியோர், தங்களின் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

தேர்தல் தினத்துக்கு முன்னதாகவே அவர்கள் தங்களது வாக்குகளை வில்மிங்டனில் உள்ள வாக்குச் சாவடியில் பதிவுசெய்தனர்.

இதன்போது கருத்துதெரிவித்த அவர் – 'பிலடெல்பியாவில் கருப்பின இளைஞரை பொலிஸார் சுட்டுக்கொலை செய்த நிலையில் வெடித்த வன்முறைச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன். தான் ஜனாதிபதியானால் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்கு தீர்வு காணப்படும்' எனக் கூறினார்.

ஏற்கனவே ஜனாதிபதி தேர்தலையொட்டி கிட்டத்தட்ட 5 கோடிக்கும் அதிகமான அமெரிக்கர்கள் வாக்களித்துள்ளனர்.

உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல், எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோ பிடன் போட்டியிடுகிறார்.

வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்கள் வரிசையில் காத்திருக்கின்றமையைத் தவிர்க்க முன்கூட்டியே வாக்களிக்கும் வசதி தற்போது அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் ஒரே நாளில் ஒரு லட்சம் கொரோனாத் தொற்றாளர்கள்!

அமெரிக்காவில் அசுர வேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் (கொவிட் -19) தொற்றால், கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் ஒரு லட்சத்து ஆயிரத்து 461 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு, 988 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

உலகளவில் கொவிட் -19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல்நாடாக விளங்கும் அமெரிக்காவில் இதுவரை மொத்தமாக 93 லட்சத்து 16 ஆயிரத்து 297 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு லட்சத்து 35 ஆயிரத்து 159 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 30 லட்சத்து 56 ஆயிரத்து 626 பேர் அங்குள்ள வைத்தியசாலைகளில்; சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 17ஆயிரத்து 150 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை 60 லட்சத்து 24 ஆயிரத்து 512 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## துருக்கி, கிரேக்கத்தில் நிலநடுக்கம் உயிரிழப்பு 26 ஆக உயர்ந்துள்ளது



துருக்கி மற்றும் கிரேக்கத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும், சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் இருந்து தப்பிப் பிழைத்தவர்களைத் தேடும் முயற்சியில், மீட்புப் படையினர் சனிக்கிழமை அதிகாலையில் ஈடுபட்டுள்ளனர்.

துருக்கியின் மேற்கில் கடலோரப் பகுதிகளில் 24 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். கிரேக்க தீவான சமோஸில் ஆண் மற்றும் பெண் என இரண்டு இளைஞர்கள் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர்.

துருக்கியில் பெரும்பாலான சேதங்கள் ஈஜியன் ரிசார்ட் நகரமான இஸ்மீர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிகழ்ந்தன. இது 30 லட்சம் குடியிருப்பாளர்களைக் கொண்டுள்ளது.

அடுக்குமாடி குடியிருப்புகளால் நிரம்பியுள்ள இந்தப் பகுதியில், இடிபாடுகளில் எத்தனை பேர் சிக்கியுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

துருக்கியில் நிலநடுக்கத்துக்குப் பின் 196 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவற்றில் 4 இற்கு கூடுதலாக ரிக்டர் அளவு கொண்ட நில அதிர்வுகள் 23 முறை ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசி சோதனை தற்காலிகமாக நிறுத்தம்



ரஷ்யாவில் உருவாக்கப்பட்டுள்ள 'ஸ்புட்னிக் – 5' கொரோனா வைரஸ் (கொவிட் -19) தடுப்பூசியை மனிதர்களின் உடலில் செலுத்தி ஆய்வு செய்யும் மூன்றாவது கட்ட சோதனை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தடுப்பு மருந்து போதிய அளவு கைவசம் இல்லாதமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்குப் பிறகு அந்தத் தடுப்பூசியின் சோதனை மீண்டும் தொடங்கும் என்று சுகாதாரத் துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் பயன்பாட்டுக்காக உலகிலேயே முதல் முறையாக ஸ்புட்னிக் – 5 தடுப்பூசிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எனினும், அந்த மருந்தை பெருமளவில் தயாரிப்பது சவாலாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் காமாலியா தொற்று நோய் தடுப்பு நுண் அறிவியல் ஆய்வு நிறுவனம் ரஷ்யாவின் நேரடி முதலீட்டு நிறுவனத்துடன் இணைந்து தடுப்பு மருந்தைத் தயாரித்துள்ளது. ஸ்புட்னிக் – 5 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மருந்து கிளினிக்கல் பரிசோதனையில் 3 ஆம் கட்டத்துக்குச் செல்லவில்லை என்று கூறப்பட்டது.

இருப்பினும் மருந்தின் மீதான நம்பகத்தன்மையை மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் தனது மகளுக்கே இந்த மருந்தைச் செலுத்தினார் ரஷ்ய ஜனாதிபதி புடின். ஆனால், உலக ஆய்வாளர்கள் மத்தியில் ரஷ்யா கண்டுபிடித்துள்ள ஸ்புட்னிக் – 5 கொவிட் -19 தடுப்பு மருந்து மீது முழுமையான நம்பிக்கை வராதமையால் அதனைத் தொடர்ந்து விமர்சித்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து தங்கள் தடுப்பூசி மருந்தை மூன்றாம் கட்டச் சோதனைக்கு உட்படுத்த ரஷ்யா தீர்மானித்துள்ளது.

## கடந்த 200 நாள்களாக தாய்வானில் கொரோனா தொற்று பதிவாகவில்லை!

தாய்வானில் கடந்த 200 நாள்களாக, யாருக்கும் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்று உறுதியாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோயின் புதிய அலைகளைக் கட்டுப்படுத்த உலகின் பெரும்பகுதி போராடி வரும் நிலையில், இந்தச் செய்தி, கொரோனா பாதிப்பால் ஆட்டம் கண்டுவரும் நாடுகளை வியக்க வைத்துள்ளது.

2 கோடியே 30 லட்சம் மக்கள் வசிக்கும் தீவு கடைசியாக ஏப்ரல் 12ஆம் திகதி நிலைவரப்படி, 553 தொற்றுகளை உறுதிப்படுத்தியுள்ளது. அவற்றில் 55 மட்டுமே உள்ளூர் பரிமாற்றங்கள். ஏழு இறப்புகள் பதிவாகியிருந்தன.

சீனாவில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை உயரத் தொடங்கிய ஜனவரி மாதமே தாய்வான் தனது எல்லைகளை மூடியது. பயணங்களை ஒழுங்குபடுத்தி வந்தது. இன்னமும் எல்லைகள் மீதான கட்டுப்பாடுகளை அப்படியே வைத்துள்ளது.

தொற்று ஏற்பட்ட நபருடன் தொடர்பில் இருந்தவர்களை தீவிரமாகக் கண்டுபிடித்தது. ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் அவருடன் சம்பந்தப்பட்ட 150 பேர் வரை தனிமைப்படுத்தியது. அனைவருக்கும் அரசாங்கத்தால் முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டன.

உள்ளூர் அளவில் தாய்வானில் கொரோனா பாதிப்பு இல்லை என்றாலும், கடந்த 2 வாரங்களில் வெளிநாடுகளில் இருந்து வந்த 20 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அவர்கள் சிகிச்சையில் உள்ளனர். இதனால் எச்சரிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கிறது.

## கருணைக் கொலையைச் சட்டபூர்வமானதாக்க நியூஸிலாந்தில் பெருமளவானோர் வாக்களிப்பு

குணப்படுத்தவோ அல்லது போதுமான சிகிச்சையளிக்கவோ முடியாதவர்களுக்கு கருணைக் கொலையை சட்டபூர்வமான தாக்க பெருமளவான நியூஸிலாந்து மக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

கருணைக்கொலை தொடர்பாக பல ஆண்டுகள் இடம்பெற்ற உணர்ச்சிபூர்வமான விவாதங்களையடுத்து, அதனைச் சட்டபூர்வமாக்குவது தொடர்பாக மக்களின் கருத்தறியும் வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்தது.

இம்மாத நடுப்பகுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் ஆரம்பகட்ட முடிவுகள், நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியாகின. இந்த முடிவுகளில் 65.2 வீதமான வாக்குகள்; 2019ஆம் ஆண்டின் வாழ்வை முடித்துக்கொள்வதற்கான தெரிவுச்சட்டத்துக்கு ஆதரவாக அளிக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் புதிய சட்டமாகி, 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமுலுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கும் குறைவான நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு மருத்துவர்கள் ஒப்புதல் அளித்தால் உதவி இறப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை இந்த சட்டம் அனுமதிக்கும்.

அதன் எதிர்ப்பாளர்கள் சட்டத்தில் போதுமான பாதுகாப்புகள் இல்லை என்று கூறுகிறார்கள்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1983.06.18
மதம் – இந்து
நட்சத்திரம் – உத்திரம் 1
பாவம் – 21
செவ்வாய் – 1 இல்
கல்வி – பட்டதாரி
தொழில் – சுகாதார திணைக்களம் (T.O)
எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம், வீடு தேவையில்லை.

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1979.05.09
மதம் – இந்து
நட்சத்திரம் – உத்திராடம் 4
பாவம் – 25 3/4
கல்வி – பட்டதாரி
தொழில் – விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி உத்தியோக மணமகள் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், மாதம் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இலையாளன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரக் கோரிக்கை!

## வலி.கிழக்கு மக்கள் டக்ளஸிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.31

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் விவசாயிகள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரியப்படுத்தியமையுடன் அதற்கான தீர்வுகளை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) வலிகாமம் கிழக்கு விவசாயிகள் கலந்து ரையாடியிருந்தனர். இதன் போதே அவர்கள் அமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது உருளைக் கிழங்கு விதைகளை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறும் கோரிய மையுடன் நீர் இறைக்கும் இயந்திரங்களையும் மானிய அடிப்படையில் பெற்றுத்தருமாறு கேட்டிருந்தனர்.

அத்துடன் யூரியா மற்றும் அமோனிய உள்ளிட்ட உரங்களை விவசாயிகளுக்குத் தேவையான அளவு பெற்றுத் தருமாறு கோரியமையுடன் அம்பன் புயலால் சேதமடைந்த வாழைப் பயிர் செய்கைக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்திருந்தனர்.

மேலும் யாழ். மாவட்ட சந்தைகளில் விவசாய உற்பத்திகளுக்கு 10 இற்கு 1 என்ற கழிவு நடைமுறை காணப்படுவதால் விவசாயிகளிடையே பெரும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே அது தொடர்பிலும் அவதானம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்ட அமைச்சர், அவை தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி விரைவில் தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தெரிவித்திருந்தமையுடன், அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள நிலையில் அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தச் சந்திப்பின்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் மற்றும் கட்சியின் வலி. கிழக்கு நிர்வாகச் செயலாளர் இராமநாதன் ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹற்றன் டிக்கோயாவில் தொற்று நீக்கும் பணி!

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஹற்றன் டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்குத் தொற்று நீக்கும் மருந்துகள் விசிறும் நடவடிக்கைகள் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஹற்றனில் இருந்து போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் ஒட்டோக்களுக்கு இந்த தொற்று நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டுள்ளன.

ஹற்றன் டிக்கோயா நகர சபையின் வழிகாட்டலில் இந்த தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன. இந்த பணிகள் நேற்று காலை ஹட்டன் பிரதான பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஹற்றன் டிக்கோயா நகர சபையின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கும் நடவடிக்கையின்போது ஹற்றனில் இருந்து சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ்கள், ஒட்டோக்களுக்கு தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் பிரதேசசபை உறுப்பினருக்கும் முறுகல்!



ஹற்றன், ஒக்.31

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக வர்த்தக நிலையங்களை மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் முயற்சித்தமையால் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஹற்றன் - டிக்கோயா நகரசபையின் நிர்வாகத்துக்குட்பட்ட டிக்கோயா நகரிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா மற்றும் அளுத்கம பகுதிகளில் வீதிக்கு இருமருங்கிலும் வியாபாரம் செய்வதற்குத் தற்காலிகமாகத் தடைவிதிப்பதற்குப் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்தவேளையிலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் நகரம் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லை. எனவே, வர்த்தக நிலையங்களை மூடவேண்டிய தேவையில்லை.' - என்று பிரதேச சபை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

ஹற்றன் நகரில் முதலாவது கொரோனா தொற்றாளர் கடந்த 25 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார். இதனையடுத்து 25 ஆம் திகதி முதலே ஹற்றன் நகரம் தனிமைப்படுத்தப்பட்டது. அன்று மாலை ஹற்றன் மற்றும் டிக்கோயா நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகரசபை தலைவரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 5 லட்சத்தைத் தாண்டியது பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஒக்.31

இலங்கையில் இதுவரை 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று (வெள்ளிக்கிழமை) மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தால் 10 ஆயிரத்து 173 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கட்சியின் முடிவிலிருந்து விலகியோர்க்கு அடுத்தவாரம் ஒழுக்காற்று நடவடிக்கை!

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அடுத்த வாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன என்றும் அடுத்த கட்டமாக விசாரணைகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான டயானா கமகே, இஷாக் ரஹ்மான், எம்.ரஹீம், நசீர் அகமட், மொஹமட் ஹரிஸ், பைசல் காசிம், அரவிந்தகுமார் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அண்மையில், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான லகஷ்மன் கிரியெல்ல, அந்த உறுப்பினர்களை கட்சியில் இருந்து வெளியேற்றியமையால், அவர்களை அரசாங்கத்துடன் அமரவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். - கொழும்பு பஸ்ஸில் பயணித்தோர் சுகாதாரப் பணிமனையுடன் தொடர்புகொள்க!

கொழும்பு, ஒக்.31

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொழும்பில் உணவகம் நடத்தும் உரிமையாளருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவருடன் பஸ்ஸில் பயணித்தவர்களைத் தமது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் சில மூடப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளன. அத்தோடும் மேலும் பல வர்த்தக நிலையங்கள் தொடர்பில் பொலிஸார், சுகாதாரத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன், அவருடன் தொடர்புடைய நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சுயதனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளர் மற்றும் அவருடன் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையைச் சேர்ந்த ஒருவரும் என நால்வர் என்.சி.ஜி என்ற பெயர்கொண்ட டபிள்யூ பி. ஏன்.சி.8760 என்ற இலக்கமுடைய பஸ்ஸில் கொழும்பிலிருந்து கடந்த 25 ஆம் திகதி இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுள்ளனர்.

அவர்கள் நால்வரும் மறுநாள் 26ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அங்கிருந்து உணவக உரிமையாளர் ஒட்டோவில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள வீட்டுக்குச் சென்றுள்ளார். பணியாளர்களும் ஒட்டோவில் வேலணை, புங்குடுதீவுக்கு புறப்பட்டுள்ளனர்.

அத்துடன், உணவக உரிமையாளர் யாழ்ப்பாணம் நகரில் இரண்டு தினங்கள் நடமாடியுள்ளார். அத்துடன், வைமன் வீதியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையம், கோயில் வீதியில் உள்ள உணவகம் என்பவற்றுக்கும் சென்றுள்ளார்.

அதனால் சிகையலங்கரிப்பு நிலையம், உணவகம் என்பன மூடப்பட்டுள்ளனர். அவற்றைச் சேர்ந்தோர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளர் பயணித்த ஒட்டோவின் சாரதி கொட்டடியில் உள்ள அவரது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அதுதொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க ஒட்டோ உரிமையாளர் சங்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிக்கப்பட்ட உணவக உரிமையாளரின் அயலவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் நூற்றுக் கணக்கானோர் சுயதனிமைப்படுத்தப்படவுள்ளனர். யாழ்ப்பாணம் நகரில் சில வர்த்தக நிலையங்கள் தொடர்பிலும் ஆராயப்படுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்குப் புறப்பட்ட பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூக அக்கறையுடன் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2020 இல் வெளியிடப்பெற்றது.